செ.வெ.எண் : 14/ ஜூலை நாள் : 07.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பாக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TAMCO) மூலம் தொழில் மற்றும் கல்வி கடன் வழங்கும் லோன் மேளா சிறப்பு முகாமில்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (07.07.2017) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TAMCO) மூலம் தொழில் மற்றும் கல்வி கடன் வழங்கும் லோன் மேளா சிறப்பு முகாமில் பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றார்.

இச்சிறப்பு முகாமினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையின சமூக மக்களான கிறித்துவ, இஸ்லாமிய, சீக்கிய, புத்த, பார்சி மற்றும் ஜெயின் சமூகத்தை சார்ந்த மக்களுக்கு அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) தொழில் மற்றும் கல்விக்கடன் உள்ளிட்ட பல்வேறு கடன் உதவிகள் வழங்கி அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்கான நல்ல வாய்ப்புகளை அளிக்கின்றது. தனிநபர் கடன் திட்டம் 1-ன்கீழ் கிராமப்புறமாயின் ஆண்டு வருமானம் ரூ.81,000/-, நகர்புறமாயின் ஆண்டு வருமானம் ரூ.1,03,000/- உள்ள சிறுபான்மையினர் சமூகத்தை சேர்ந்த நபர்களுக்கு சில்லரை வியாபாரம், வியாபாரம் அபிவிருத்தி கடன், கைவினைஞர் மற்றும் மரபு வழி சார்ந்த தொழில்கள், தொழில் மற்றும் தொழில் சேவை நிலையங்கள், இலகுரக போக்குவரத்து வாகனக்கடன் மற்றும் விவசாயம் தொடர்பாக தொழில்களுக்கு ரூ.50,000/- (வட்டி வீதம் 5%) முதல் ரூ.20,00,000/- (வட்டி வீதம் 6%) கடன் வழங்கப்படுகிறது.

இதுதவிர தனிநபர் கடன் திட்டம் II -ன் கீழ் ஆண்டு வருமானம் ரூ.6 லட்சம் வரை இருந்தால் மேற்கண்ட தொழில்களுக்கு ரூ.50,000/- முதல் ரூ.30 லட்சம்/- வரை பெண் பயானாளிகளுக்கு ஆண்டிற்கு 6% என்ற வட்டி விகிதத்திலும், ஆண் பயானாளிகளுக்கு ஆண்டிற்கு 8% என்ற வட்டி விகிதத்திலும் கடன் வழங்கப்படுகிறது. சுயஉதவிக்குழு கடன் வழங்கும் திட்டம் I மற்றும் II -ன் கீழ் முறையே உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,00,000/- மற்றும் ரூ.150000/- வழங்கப்படுகிறது என்றும், கல்வி கடன் திட்டம் I -ன் கீழ் (இளங்கலை/ முதுகலை/ தொழிற்கல்வி / தொழில்நுட்ப கல்வி மற்றும் குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி படிப்பு) ஆண்டு ஒன்றுக்கு ரூ.3 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.20 இலட்சம் கடனுதவியும், வெளிநாடு தொழிற்கல்வி பயில கல்விகடன் திட்டம் I கீழ் அதிகபட்சம் ரூ.20 இலட்சம் கடனுதவியும், கல்விகடன் திட்டம் II -ன் கீழ் (ஆண்டு வருமானம் ரூ.6 இலட்சம்) அதிகபட்சம் ரூ.30 இலட்சம் கடனுதவியும் வழங்கப்படுகிறது.

மேலும் கறவை மாடு கடனுதவி பெற மாடு ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் இரண்டு மாடுகள் வாங்குவதற்கு ரூ.50,000/- கடனுதவி வழங்கப்படுகிறது மற்றும் ஆட்டோ வாங்குவதற்கு கடனுதவியும் வழங்கப்படுகிறது.

மேற்படி திட்டங்களின் கீழ் கடனுதவி பெற சாதிச்சான்று, வருமானச்சான்று, குடும்ப அட்டை, ஆதார் அடையாள அட்டை நகல் அளிக்க வேண்டும் . கல்விக் கடனுதவி பெற மேற்கண்ட சான்றுகளுடன், கல்வி கட்டணச்சான்று, விடுதிச்சான்று, தொழிற்கடன் உதவி பெற கடன் பெறும் தொழில் குறித்த திட்ட அறிக்கை மற்றும் ஓட்டுநர் உரிமம் நகல் (ஆட்டோ கடனிற்கு மட்டும்) மற்றும் கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்து பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தை அணுகலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் பயனாளிகளிடமிருந்து கடனுதவி பெறுவதற்கான விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார். இம்முகாமில் சுமார் 300 பயனாளிகள் கலந்து கொண்டு கடன் கோரி விண்ணப்பங்களை அளித்தனர்.

இம்முகாமில் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு.பி.எம்.முருகேசன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் திரு.ஜெயராமன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.வ.முருகானந்தம் உள்பட அரசு அலுவலர்கள், நகர கூட்டுறவு வங்கி செயலாளர்கள் மற்றும் கிராமப்புற கூட்டுறவு வங்கி செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**